# சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ்
# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த அறிக்கை
# 17–4–2008.

சென்னை மாநகரின் மைய பகுதியில் இருந்த மத்திய சிறையினை திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள புழல் பகுதிக்கு மாற்றிய காரணத்தால், ஏற்கனவே மத்திய சிறைச்சாலை இருந்த 13.238 ஏக்கர் நிலம் தற்போது காலியாக உள்ளது.

இந்த நிலத்தில் 1 ஏக்கர் நிலத்தை, சென்னை மெட்ரோ ரெயில் அலுவலகத்திற்கு வழங்குவதென்றும் – ஒன்றரை ஏக்கர் நிலத்தை மெட்ரோ ரெயில் செயல்பாட்டிற்கான துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை போக அங்கே 10.73 ஏக்கர் நிலம் எஞ்சி உள்ளது.

இந்த நிலையில் சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவ மனையின் விரிவாக்கத்திற்கு மேலும் நிலம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக உள்ளது. சென்னை அரசு பொது மருத்துவ மனை 165 ஆண்டு கால பாரம்பரியம் மிக்கது. 2,722 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை இது. இத்துடன் சுமார் 2000 மாணவர்கள் படிக்கும் மருத்துவ கல்லூரியும் இணைந்து செயல்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு சுமார் 12 ஆயிரம் வெளி நோயாளிகள் இங்கே சிகிச்சைக்காக வந்து செல்கிறார்கள்.

இவ்வளவு பெரிய மருத்துவ மனை தற்போது சுமார் 30 ஏக்கர் நிலத்தில் மட்டுமே அமைந்திருப்பதால் இடப் பற்றாக்குறை பெரிதும் உள்ளது. இதனைப் போக்கிடும் வகையில், இந்தப் பொது மருத்துவமனைக்கு பக்கத்திலே உள்ள – பழைய சிறைச்சாலை இருந்த இடத்திலே எஞ்சியுள்ள சுமார் பத்து ஏக்கர் நிலத்தினை அரசு பொது மருத்துவ மனையின் விரிவாக்கத்திற்காக வழங்குவதென்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இது போலவே வட சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவ மனை மற்றும் மருத்துவக் கல்லூரி மிகவும் பழமையானதாகும். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சுமார் 1500 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இந்த மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியின் வளர்ச்சிக்காக தமிழக அரசு 100 கோடி ரூபாய் சென்ற ஆண்டு தான் வழங்கியுள்ளது. குறிப்பாக மாணவர்களுக்குத் தேவையான விடுதி வசதிகளை ஏற்படுத்தவும், மருத்துவ மனை விரிவாக்கத்திற்காகவும் இந்தத் தொகை செலவிடப்படவுள்ளது. அங்கேயும் இடப் பற்றாக்குறை பெரிதாக உள்ளது.

இந்த மருத்துவ மனைக்கு அருகில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலம் உள்ளது. ஸ்டான்லி மருத்துவ மனையின் தேவையை உத்தேசித்து, தற்போது பொதுப்பணித் துறையின் வசம் உள்ள இந்த பத்து ஏக்கர் நிலத்தைப் பெற்று, அதனை ஸ்டான்லி மருத்துவ மனையின் விரிவாக்கத்திற்காக வழங்கவும் தமிழக அரசு முடி வெடுத்துள்ளது.

*

அடுத்து, சென்னை மாவட்டம், அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் – புல எண்கள். 13 மற்றும் 64இல் உள்ள சுமார் 320 கிரவுண்ட் நிலம் பற்றி பேரவைக்கும் நாட்டிற்கும் சில முக்கிய விவரங்கள் அறிவிக்கப்பட வேண்டும். இந்த இடத்தின் இன்றைய மதிப்பு சுமார் 1000 கோடி ரூபாய்க்கு மேலாகும். அரசாங்கத்திற்கு சொந்தமான இவ்வளவு விலை மதிப்புள்ள பெரிய இடம், வேளாண் தோட்டக் கலை சங்கத்திற்கு வழங்கப்பட்டதை பொது நோக்கத்திற்காக அரசாங்கம் திரும்பப் பெற 5–8–1989இல் ஆணையிட்டது.

இந்த ஆணையை எதிர்த்து வேளாண் தோட்டக் கலை சங்கம் சார்பில் தாக்கல் செய்த மனுவின் மீது சென்னை உயர் நீதி மன்றம் <u>அரசாணையை தள்ளுபடி</u> செய்து, 19–6–1998இல் தீர்ப்பளித்தது. தமிழக அரசு சென்னை உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து – அதில் 20–8–1998இல் தற்போதைய நிலையே தொடரலாம் என உயர் நீதி மன்றம் ஆணை பிறப்பித்தது.

அரசு தரப்பில் எவ்வித அறிவுரையோ, ஆணையோ இல்லாத நிலையில், அன்றிருந்த ஆட்சியில், அரசு வழக்கறிஞர் தானாகவே உயர் நீதி மன்றத்தில் மனு செய்ததற்கிணங்க, சென்னை உயர் நீதி மன்றம் 21–12–2004 அன்று அரசின் சார்பாக மேல் முறையீட்டு மனுக்களைத் திரும்பப் பெற அனுமதியளித்து ஆணையிட்டது.

3.3.2006 அன்று தோட்டக் கலை நிலம் முழுவதையும் தோட்டக் கலை சங்கத்திற்கே மீண்டும் ஒப்படைக்க அன்றைய அரசினால் ஆணையிடப்பட்டது. ஆனால் பொதுத் தேர்தலையொட்டி தேர்தல் ஆணையம் வழங்கிய அறிவுரைகளின்படி இந்த ஆணை நிறைவேற்றப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

அரசு மீண்டும் வழக்கினைத் தொடர வாய்ப்பாக க 2006இல் திமு.க. அரசு மனு தாக்கல் செய்தது. உயர் நீதி மன்றம் 4–4–2007இல் வழங்கிய ஆணையில், தாமதத்தை ஏற்று வழக்கு தொடர அனுமதித்தது. இதனை எதிர்த்து வேளாண் தோட்டக் கலை சங்கம் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்தது. உச்ச நீதி மன்றம் தனது 16–5–2007 நாளிட்ட தீர்ப்பில் தோட்டக்கலை சங்கத்தின் மனுவை தள்ளுபடி செய்தது.

சென்னை உயர் நீதி மன்றத்தில் அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்களின் மீதான வழக்கில் சென்னை உயர் நீதி மன்றம் 11–4–2008 நாளிட்ட தீர்ப்பில் இந்த அரசு செய்த மேல் முறையீட்டு மனுக்களை அனுமதித்தும், 19–6–1998 நாளிட்ட தனி நீதிபதியின் தீர்ப்பினை தள்ளுபடி செய்தும் தீர்ப்பு வழங்கியது.

அந்தத் தீர்ப்பின் முக்கிய சாராம்சம் வருமாறு :–

அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாமலே வேளாண் தோட்டக்கலை சங்கம் உட்லண்ட்ஸ் டிரைவ் இன் ரெஸ்டாரன்டிற்கு இந்த நிலத்தில் ஒரு பகுதியை உள்குத்தகைக்கு விட்டது.

அதன் பின்னர், அரசு அனுமதி இல்லாமலேயே மீண்டும் ஐந்தாண்டுகளுக்கு டிரைவ்–இன் உணவு விடுதிக்கு உள்குத்தகையை நீட்டிப்பு செய்துள்ளது.

திரு. கிருஷ்ணமூர்த்தி தோட்டக் கலைச் சங்கத்தைத் தனது சொந்த சொத்து போலக் கையாள்வதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மேலும், இச் சங்கத்தின் மீது நிதிமுறைகேடுகள் குறித்து பல குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மாவட்டப் பதிவாளர், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டார். சங்கத்தின் மீது இத்தகைய கடுமையான குற்றச்சாட்டுகள் இருக்கும் போது அரசு பொது காரணங்களுக்காக நிலத்தை திரும்பப் பெறக் கோரிய காரணங்களைப் புறக்கணித்துவிட்டு நிரூபணமாகாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலும், அரசியல் காழ்ப்புணர்வு காரணம் என்றும் கூறி அவர்கள் தொடுத்த நீதிப்பேராணைகளை ஒரு நபர் நீதிபதி அனுமதித்துள்ளார்.

ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சமான ரூபாய் ஐந்தாயிரம் செலவில் மலர்க் கண்காட்சியை நடத்தியதைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும் தோட்டக் கலை சங்கத்தால் ஏற்பட்டதாகக் காட்டப்படவில்லை. மேலும் மலர்க்கண்காட்சியை நடத்தியது தொடர்பாக அதிக அளவில் பணம் வசூல் செய்தும் அதில் குறைந்த அளவே செலவு செய்தும் நிதிமுறைகேடுகள் நடைபெற்றுள்ளதால் அச்சங்கத்தின் மீதும் அதனுடைய செயலாளர் மீதும் உரிய அலுவலரால் விசாரணை செய்யப் பட வேண்டும்.

வருவாய் நிலை ஆணைகளின்படியும், அரசு வழிகாட்டி நெறி முறைகளின்படியும் காலங்காலமாக குடியிருக்க வசதியின்றி வாடும் ஏழை எளிய மக்களுக்கு இருப்பிடம் வழங்க வேண்டும் என்ற நெறிமுறைகள் ஒருபுறம் இருக்க, இச்சங்கத்திற்குச் சொந்தமாக நிலங்கள் உள்ளதாலும் அதன் ஒருபகுதியில் மட்டுமே தோட்டக்கலை வளர்ச்சிக்காக அவர்கள் பயன்படுத்தி வருவதாலும் அரசால் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை சங்கத்தின் கௌரவச் செயலாளர்

திரு.வி.கிருஷ்ணமூர்த்தி தனது சொந்த உபயோகத்திற்காக அதாவது வாடகைக் கார் நடத்தவும் மற்றும் மீனா அட்வர்டைசர்ஸ் என்ற பெயரிலான விளம்பர நிறுவனத்திற்கும் பயன்படுத்தி வருவதாக ஆவணங்களின்மூலம் தெரிய வருவதால் அரசால் மேற்படி நிலங்களை திரும்பப் பெறுவது குறித்த அரசின் நடவடிக்கையில் எவ்விதத் தவறும் இருப்பதாக கருத இயலாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி தனது மனுவில் கார் மற்றும் விளம்பர நிறுவன வியாபாரம் நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். நிலம் ஏற்கனவே அரசின் வசம் உள்ளதைக் கருத்தில் கொண்டும் அரசின் தலைமைச் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையிலும் இந்நிலங்கள் பொதுக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

இவ்வழக்கில் உள்குத்தகைதாரரான உட்லண்ட்ஸ் டிரைவ்–இன் உணவுவிடுதி உரிமையாளர் வாதியாக இல்லாதபோதிலும் இந்நீதிமன்றத் தீர்ப்புக்கு கட்டுப்பட்டவராகிறார். ஏனெனில், தோட்டக்கலை சங்கம் இந்நிலங்களை அரசின் அனுமதியின்றி உணவு விடுதிக்கு உள் குத்தகைக்கு விட உரிமையில்லாதபோதும் உள்குத்தகைக்கு அனுமதித்துள்ளது.

இது தொடர்பாக அரசால் ஏதும் அனுமதி வழங்கப்படாத நிலையில் நிலத்தை திரும்பப் பெற்றது சரியானது தான் என்கிற போது, உள்குத்தகைதாரர் தானாகவே இந்த இடத்தை காலி செய்ய வேண்டும். எனவே, தோட்டக்கலை சங்கத்தால் உள்குத்தகைக்கு விடப்பட்ட நிலம் உள்பட அனைத்து நிலங்களையும் அரசு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக தோட்டக் கலை சங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது அடிப்படையில்லாத வாதமாகும்.

அரசு இந்த நிலத்திற்கு உரிமையாளர் என்பதை 28.4.1980–ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், உட்லண்ட்ஸ் டிரைவ்–இன் உணவு விடுதி உட்பட அனைத்து நிலங்களையும் திரும்பப் பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது. மேலும், மேற்படி சங்கத்தால் அரசின் அனுமதியின்றி உள்குத்தகைக்கு விடப்பட்டு அதன் வாயிலாகப் பெறப்பட்ட

வாடகைத் தொகை முழுவதையும் வசூலிக்கவும் அரசுக்கு அதிகாரம் உள்ளது. ஏனெனில் உள்குத்தகைக்கு விட்டதே சட்டத்திற்குப் புறம்பானதாகும்.

பொதுக் காரணத்திற்காகவும் நிபந்தனைகளை மீறிய காரணத்திற்காகவும் நிலத்தை திரு.வி.கிருஷ்ணமூர்த்தி சொந்த வியாபாரத்திற்காகவும் அரசின் அனுமதியின்றி உட்லண்ட்ஸ் டிரைவ்–இன் உணவு விடுதிக்கு உள் குத்தகைக்கு வழங்கியதாலும் நிலத்தை திரும்பப் பெற அரசிற்கு அதிகாரம் உள்ளது.

சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி சென்னை நகரின் இதயப் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான நிலத்தை தனது சுய லாபத்திற்கும் வருமானத்திற்கும் அரசுக்கு ஒரு பைசா கூட செலுத்தாமல் பயன்படுத்தியுள்ளார். எனவே, அரசுக்கு சொந்தமான நிலத்தை சட்டத்திற்குப் புறம்பாக கௌரவ செயலாளரான திரு.வி.கிருஷ்ணமூர்த்தி, தனது சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தியும், அதில் வாடகை வசூலித்தும் வருமானம் ஈட்டியுள்ளதால் அத்தொகையை வசூலிக்கவும் அரசுக்கு அதிகாரம் உள்ளது."

இவ்வாறு இந்தப் பிரச்சினையில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி அவர்களின் இந்தத் தீர்ப்புக்கு இணங்க அரசிற்கு சொந்தமான இந்த சுமார் 320 கிரவுண்ட் இடம் சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பின் அரசின் வசம் வந்துள்ளது. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் சென்னையின் இதயம் போன்ற பகுதியில் உள்ள இந்தப் பெரிய இடத்தில் சென்னை வாழ் மக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளத் தக்க வகையிலும் – சென்னைக்கு மேலும் அழகூட்டத் தக்க வகையிலும் – பெங்களூரில் உள்ள "லால்பாக்" போலவும், நீலகிரியில் உள்ள தாவிர வியல் பூங்கா போலவும் உலகத் தரத்திலான சிறப்பு வேளாண் தோட்டக் கலை பூங்கா ஒன்றினை அமைப்பதென்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

***